001

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் - 09 | குடியியற்கல்வி – I, II | நேரம்: 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ...........................................................................................

### பகுதி I

**கவனிக்க.**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. இலங்கையின் பிரதான சட்ட அதிகாரி யார்?
   1) நீதி அமைச்சர் 2) பிரதம நீதியரசர்
   3) சனாதிபதி 4) சட்டமா அதிபர்

2. எந்தவொரு நாட்டிலும் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய பிரதான மூன்று செயற்பாடுகளும் முறையே.
   1) உற்பத்தி, பங்கீடு, நுகர்வு 2) உற்பத்தி, நுகர்வு, பங்கீடு,
   3) நுகர்வு, பங்கீடு, உற்பத்தி, 4) பங்கீடு, நுகர்வு, உற்பத்தி,

3. “நாட்டைச்சுற்றி தங்கவேலி” என்னும் மகுட வாசகத்தை கொண்ட பாதுகாப்புத்துறை அமைப்பு எது?
   1) இலங்கை விமானப்படை 2) இலங்கை கடற்படை
   3) இலங்கை இராணுவப்படை 4) இலங்கை பொலிஸ்படை

4. இலங்கையில் பாடசாலை கூட்டுறவுச்சங்கம் வெற்றிகரமாகச் செயற்படுவதாக அறியப்படும் பாடசாலை.
   1) கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 2) கொழும்பு றோயல் கல்லூரி
   3) கண்டி தர்மராஜக் கல்லூரி 4) காலி றிச்மன்ட் கல்லூரி

5. பின்வருவனவற்றுள் எமது நாட்டுக்கே உரித்தான விலங்கினம் **அல்லாதது** எது?
   1) கருங்குரங்கு 2) மணிப்புறா 3) ஓணான் 4) சிறுத்தைப்புலி

6. “சனநாயகம் அனைவருக்கும் உரிமைகளைப் பெற்றுத்தரும் ஆட்சி முறையாகும்” இக் கருத்தினைக் கூறிய அரசியல் அறிஞர் யார்?
   1) ரூசோ 2) சீலர்
   3) டைசி 4) ஆபிரகாம் லிங்கன்

7. நேரடி சனநாயக ஆட்சி முறையை இன்று நடைமுறைப் படுத்துவதில் காணப்படும் தடைகளில் **அடங்காதது.**
   1) நாடுகளின் சனத்தொகை அதிகமாக உள்ளமை
   2) மக்களின் தேவைகள் விரிவடைந்தமை
   3) தற்கால ஆட்சி முறைமை இலகுபடுத்தப் பட்டமை
   4) மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவதற்கு வசதிகள் இல்லாமை


பக்கம் 2 ஐப் பார்க்க

kalvi.lk

8. இலங்கையில் சர்வசன வாக்குரிமைக்கான வயதெல்லை 21 இல் இருந்து 18 ஆகக் குறைக்கப் பட்ட ஆண்டு எது?
1) 1957 2) 1959 3) 1956 4) 1958

9. இலங்கையில் தற்போது செயற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை (01-05-2017 ஆம் திகதிப்படி)
1) 335 2) 336 3) 334 4) 332

10. "சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்" பின்வரும் எந்த நிறுவனத்தின் நோக்கக் கூற்றாகும்.
1) சிறைச்சாலைகள் திணைக்களம்
2) சட்டமா அதிபர் திணைக்களம்
3) அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம்
4) குற்றவியல் விசாரணைத் திணைக்களம்

11. பின்வருவனவற்றுள் மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி.
1) ஒத்துழைப்பு 2) சுயநலம்
3) பொறுமை 4) கருணை

12. பின்வருவனவற்றுள் அரசியல் ரீதியாக உருவாகும் மோதலுக்கு உதாரணமாகக் குறிப்பிடக் கூடியது எது?
1) ஈராக் - குவைத் மோதல்
2) இந்தியா - பாகிஸ்தான் மோதல்
3) இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்
4) தென்னாபிரிக்காவில் கறுப்பர் - வெள்ளையர் மோதல்

13. மின்சார நுட்பவியலாளர் தொழிலைப் பெற வேண்டுமாயின் உயர்தரத்தில் தெரிவுசெய்து கற்க வேண்டிய பாடத்துறை எது?
1) கலைத்துறை 2) விஞ்ஞானப்பாடத்துறை
3) கணிதத்துறை 4) தொழில்நுட்பப் பாடத்துறை

14. நேர்முகப்பரீட்சைக்கு ஆயத்தமாதலில் சைகை மொழியில் ( Body language) **உள்ளடங்காத** விடயம் எது?
1) ஒப்பனை (Make up)
2) முகபாவனை (Facial expression)
3) கண் தொடர்பு (Eye contact)
4) கைகளின் அசைவு (Use of hand)

15. தேசிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புத் தொடர்பான மிகவும் பொருத்தமான கூற்று எது?
1) பிரதேசத்தின் தேவைகள் மற்றும் வளங்களை அடையாளம் காணுதல்.
2) மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தல்
3) மக்கள் நலன்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்
4) சேவைகளை வழங்குவதில் உயர்தரத்தினைப்பேணுதல்

16. சக வாழ்வுக்கான பண்பாக அமைவது எது?
1) நன்றாக செவிமடுத்தல் 2) ஒத்துழைப்புடன் செயற்படுதல்
3) நன்றியுடமை 4) சூழலை நேசித்தல்


பக்கம் 3 ஐப் பார்க்க
kalvi.lk

❖ 17ஆம் வினா தொடக்கம் 19 ஆம் வினா வரைக்கும் "அ" மற்றும் "ஆ" என்னும் இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தப்பாட்டுக்கு அமைய சரியான எழுத்தைத் தொடர்பு படுத்தி பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

17. நிரல் "அ" வில் அவசர தொலைபேசி இலக்கங்களும் நிரல் "ஆ" வில் அவற்றுடன் தொடர்புடைய சேவைகளும் தரப்பட்டுள்ளன. இவற்றினை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க?

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. 1929 | A – அவசர நோயாளர் காவு வண்டி |
| 2. 119 | B – சிறுவர் துஷ்பிரயோகம் |
| 3. 1990 | C – தேசிய பாதுகாப்பு மத்திய நிலையம் |
| 4. 118 | D – பொலிஸ் அவசரப்பிரிவு |

1) BDAC 2) BDCA 3) DBAC 4) ACBD

18. நிரல் "அ" வில் இலங்கையில் அமைந்து காணப்படும் மாகாணங்களும் நிரல் "ஆ" வில் அந்த மாகாணங்களுள் உள்ளடங்கும் நகரங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றினை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க?

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. வட மத்திய மாகாணம் | A – களுத்துறை |
| 2. கிழக்கு மாகாணம் | B – அம்பாந்தோட்டை |
| 3. மேல் மாகாணம் | C – பொலநறுவை |
| 4. தென் மாகாணம் | D – அம்பாறை |

1) DCAB 2) BACD 3) CDAB 4) CDBA

19. நிரல் "அ" வில் அறிஞர்களுடைய பெயரும் நிரல் "ஆ" வில் அவர்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளன. இவற்றினை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க?

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. எட்மண்ட் பார்க் | A – நேர்முகப் பரீட்சை |
| 2. றொபட் ஓவன் | B – அரசியல் கட்சி |
| 3. சார்ளி மார்ஸல்ஸ் | C – சகவாழ்வு |
| 4. அஞ்சலா நியவீரா | D – கூட்டுறவு இயக்கம் |

1) BDCA 2) DBAC 3) BACD 4) BDAC

20. "சுமோ" விளையாட்டினை தங்களது கலாசாரப் பண்பாகக் கொண்டுள்ள ஆசிய நாடு எது?

1) சீனா 2) தாய்லாந்து
3) இந்தியா 4) யப்பான்

(20X2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

**கவனிக்க**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட** மேலும் **நான்கு** வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1)

i. சமூகப் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

ii. பேண்தகு அபிவிருத்தியில் பொருத்தமான தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் **இரண்டு** எழுதுக?

iii. இலங்கையில் செயற்படும் கூட்டுறவுச் சங்கங்கள் **இரண்டு** தருக?

iv. தேர்தல் ஒன்றில் வாக்களிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

v. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிருணயம் செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டு** தருக?

vi. தொழிற் பயிற்சி தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவும் நிறுவனங்கள் **இரண்டு** தருக?

(6X2= 12 புள்ளிகள்)

2)

i. சட்டத்தின் மூலாதாரங்கள் **மூன்று** தருக?

(3 புள்ளிகள்)

ii. சட்டத்தின் பண்புகள் **நான்கு** குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

iii. (A) சர்வதேச சட்டம் என்றால் என்ன?

(3 புள்ளிகள்)

(B) தற்போது அமுலில் உள்ள சர்வதேச சட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

3)

i. தொழில்நுட்பம் என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(3 புள்ளிகள்)

ii. தொழில்நுட்ப மாற்றத்தினால் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் **நான்கு** தருக?

(4 புள்ளிகள்)

iii. ஆக்கத்திறன் மிக்க பிரசை ஒருவர் தொழில்நுட்ப மாற்றங்களைப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக?

(5 புள்ளிகள்)



kalvi.lk

4)

i. அரசியல் கட்சி முறைகளின் **மூன்று** வகைகளைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

ii. அரசியல் கட்சி ஒன்றின் பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

iii. மக்கள் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகளினால் ஆற்றவேண்டிய பணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக?

(5 புள்ளிகள்)

5)

i. இலங்கையில் தற்போது செயற்பட்டு வரும் உள்ளூராட்சி மன்றங்கள் **மூன்று** தருக?

(3 புள்ளிகள்)

ii. உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் பிரதானியின் அதிகாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

iii. உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக?

(5 புள்ளிகள்)

6)

i. மோதலை ஏற்படுத்தும் தரப்பினர் **மூவரைக்** குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

ii. மோதல் தீர்வுக்கு தேவையான பண்புகள் **நான்கு** தருக?

(4 புள்ளிகள்)

iii. மோதலை சுமூகமாகத் தீர்ப்பதன் நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக?

(5 புள்ளிகள்)

7)

i. சுயவிபரக் கோவையில் அடங்க வேண்டிய சுயவிபரங்கள் **மூன்று** தருக?

(3 புள்ளிகள்)

ii. சுயவிபரக் கோவை ஒன்றினைப் பராமரிப்பதன் முக்கியத்துவங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

iii. வேலையுலகில் காணப்படும் பல்வேறு வாண்மைத் தொழில்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டினை** விளக்குக?

(5 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457